


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.12.2023) தலைமைச் செயலகத்தில், எம்.ஆர்.எப். நிறுவனத்தின் துணைத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அருண் மேமன், நிர்வாக இயக்குநர் ராகுல் மேமன் மாப்பிள்ளை ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 3 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.12.2023) தலைமைச் செயலகத்தில், டால்மியா குழுமத்தின் தலைவர் மற்றும் செயல் இயக்குநர் அர்மித் சிங் சேத்தி சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, டால்மியா குழுமத்தின் செயல் இயக்குநர் கே.விநாயகமூர்த்தி, கே.இராமநாதன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.12.2023) தலைமைச் செயலகத்தில், மகேந்திரா ஆராய்ச்சி கூடத்தின் (Mahendra Research Valley) தலைவர் வேலுசாமி சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, மகேந்திரா ஆராய்ச்சி கூடத்தின் துணைத் தலைவர்கள் மதன்ராஜ் மற்றும் சக்திவேலன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.12.2023) தலைமைச் செயலகத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், மத்தியக் குழு உறுப்பினர் பி. சம்பத், மாநில செயற்குழு உறுப்பினர் கே. சாமுவேல்ராஜ் ஆகியோர் சந்தித்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.12.2023) தலைமைச் செயலகத்தில், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கொங்கு ஈஸ்வரன் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் நிர்வாகிகள் டி.கே.எஸ். ரமேஷ், நித்யானந்தம், அசோகன், இசை பாலு, ஜெ.கே.மூர்த்தி, விவேகானந்தன், ரமேஷ் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத் தலைவர் அமிர்தகுமார் நிர்வாகிகளுடன் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சங்க உறுப்பினர்களின் ஒருநாள் ஊதியத்தை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



மிக்ஜாம் புயல் – கன மழையைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு எடுத்து வரும் நிவாரணப் பணிகளை மேலும் வலுப்படுத்துகிற வகையில் பல்வேறு தரப்பினரும் நிதியுதவி அளித்து வருகின்றனர். அந்த வகையில், அரசின் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதி'–க்கு திரைப்பட நடிகர் விஷ்ணு விஷால், ரூ.10 லட்சத்துக்கான காசோலையை நேற்று கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

## சைதை தொகுதி அடையாறு ஆற்றங்கரையோரம் வசிக்கும்

# 8,000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சென்னை, டிச. 14-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மிக்ஜாம் புயலினால் கடுமையாக பாதிக்கப்பட்ட சென்னை - சைதாப்பேட்டை தொகுதி, அடையாறு ஆற்றங்கரையோரம் வசிக்கும் சைதை கிழக்கு பகுதியைச் சார்ந்த 8,000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்களை அமைச்சரும் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்.

நேற்று (13-12-2023 காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை ஈக்காட்டுத்தாங்களில் உள்ள அச்சுதன் நகர், அம்பாள் நகர், காந்தி நகர், கங்கையம்மன்கோயில் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, வண்டிக்காரன் தெரு ஆகிய இடங்களில் வசிக்கும் 5000 குடும்பங்களுக்கு ஆளுக்குத்தலா 5 கிலோ அரிசி, பெட்சீட், பிஸ்கட், தண்ணீர் பாட்டில் உள்ளிட்டவற்றை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்.

உணவு இடைவேளைக்குப் பிறகு மதியம் 3.30 மணிக்கு சைதை கிழக்கு பகுதி அரசு பண்ணைக் குடியிருப்பு, ஜோதியம்மாள் நகர் ஆகிய தெருக்களில் வசிக்கும் 1400 குடும்பங்களுக்கும், வெங்கட்டாபுரத்தில் வசிக்கும் 1600 குடும்பங்கள், ஆக நேற்று (13-12-2023) ஒரே நாளில் 8000 குடும்பங்களுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் நிவாரண உதவிகளை தொடர்ந்து வழங்கினார்.

இந்நிகழ்வுகளில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ், மாமன்ற உறுப்பினர் தா.மோகன் குமார், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



இயற்கைப் பேரிடரால் மக்கள் சந்தித்த இன்னலை தீர்க்க, கழக அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு பலரும் நிதியளித்து துணை நின்றுவரும் நிலையில், சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிக் கழக பொருளாளர் கமலக்கண்ணன், ரூ.2 லட்சத்திற்கான காசோலையை 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதி'க்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு உள்ளார்.